[*2019 ஜூலை 8*

மாண்புமிகு திரு. சேலூர் எஸ். ராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருச்செங்கோடு அருள்மிகு அர்த்தநாரீஸ்வரர் கோயிலுக்கு ரூ.98 இலட்சம் மதிப்பீட்டில் ஒரு திருத்தேரும், அருள்மிகு விநாயகர் வாகனத்திற்கு ரூ.16.50 இலட்சம் செலவில் ஒரு திருத்தேரும் வழங்கியமைக்கு மாண்புமிகு அம்மா அவர்களின் அரசுக்கு நன்றி தெரிவித்த மாண்புமிகு சட்டப் பேரவை உறுப்பினர் அவர்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரிய அந்தத் திருக்கோயிலுக்கு தங்கும் விடுதி கட்டுவதற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டு அதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஒப்புதல் பெறப்பட்டு, இந்த நிதியாண்டில் அந்தப் பணி தொடங்கப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு தங்களின் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி பொன். சரஸ்வதி அவர்கள்.

திருமதி பொன். சரஸ்வதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நல்ல பதிலை அளித்த மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொண்டு அமர்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்–விடைகள் நேரம் முடிவுற்றது. (குறுக்கீடு) மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்.

[**குறிப்பு:** ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

2. தகவல் கோரல்

(அ) நீட் தேர்விலிருந்து விலக்கு அளிக்கக்கூடிய இரண்டு மசோதாக்களுக்கும் குடியரசுத் தலைவரின் ஒப்புதலைப் பெற்றுத் தருவதற்கு மத்திய அரசை வலியுறுத்தி கண்டனத் தீர்மானம் நிறைவேற்றுதல் மற்றும் இதுகுறித்து உச்ச நீதிமன்றத்தை அணுகுதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்.

2019 ஜூலை 8]

திரு. மு.க. ஸ்டாலின்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீட் தேர்வு குறித்து ஒரு கவன ஈர்ப்புத் தீர்மானத்தைத் தங்களுக்கு நான் அனுப்பி வைத்திருக்கிறேன். அதுகுறித்து பேசுவதற்காக அனுமதி தந்தமைக்கு முதலில் தங்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். மருத்துவக் கல்லூரிகளில் சேர்வதற்காக நடத்தப்படக்கூடிய நீட் தேர்விலிருந்து தமிழகத்திற்கு முழு விலக்கு அளிக்க வேண்டும் என்று இதே சட்டமன்றத்தில் கடந்த *1–2–2017* அன்று *2* மசோதாக்கள் அனைத்துக் கட்சிகளும் ஒன்று சேர்ந்து ஏக மனதாக ஒருமித்த கருத்தோடு நிறைவேற்றப்பட்டு, அந்த *2* மசோதாக்களையும் நாம் அனுப்பி வைத்தோம். அந்த *2* மசோதாக்களையும் மாண்புமிகு தமிழகத்தினுடைய ஆளுநர் அவர்கள் *18–2–2017* அன்று குடியரசுத் தலைவர் அவர்களுடைய ஒப்புதலுக்காக அனுப்பி வைத்திருக்கின்றார்கள். அரசமைப்புச் சட்டப் பிரிவு *246*–ன்கீழ் பாராளுமன்றம் சட்டம் இயற்றும் ஒன்றியப் பட்டியல்–Union List, மாநிலச் சட்டமன்றம் சட்டம் இயற்றும் மாநிலப் பட்டியல்–State List, பாராளுமன்றம் மற்றும் சட்டமன்றம் ஆகியவை சட்டம் இயற்றும் அதிகாரம் உள்ள ஒத்திசைவுப் பட்டியல்–Concurrent List என்று வகைப்படுத்தி சட்டம் இயற்றும் அதிகாரம் வழங்கப்பட்டிருக்கிறது. மத்திய அரசுக்கும், மாநில அரசுகளுக்கும் வழங்கப்பட்டுள்ள இந்தச் சட்டம் இயற்றும் அதிகாரம்தான் கூட்டாட்சியின் தத்துவமாக விளங்கிக் கொண்டிருக்கின்றது. அது நம்முடைய அரசமைப்புச் சட்டத்தில் போற்றத்தக்க மாண்பாகக் கருதப்பட்டுக் கொண்டிருக்கிறது. மருத்துவக் கல்வியைப் பொறுத்தவரையில், Concurrent List *25*–ல் entry–ஆகியிருக்கிறது. ஆகவே, மத்திய அரசுக்கு எப்படி சட்டம் இயற்றும் அதிகாரம் இருக்கிறதோ அதேபோல் இந்தச் சட்டமன்றத்திற்கும் சட்டம் இயற்றக்கூடிய அதிகாரம் நிறைவாக இருக்கிறது. அதற்காகத்தான் சட்டமன்றத்திற்கு Concurrent List–ல் உள்ள பொருள் குறித்தும் சட்டம் இயற்றும் அதிகாரம் அரசமைப்புச் சட்டப் பிரிவு *254*(*2*)–ன்கீழ் வழங்கப்பட்டு, பாராளுமன்றத்திற்கு இணையாக மாநில சட்டமன்றத்தின் இறையாண்மையை அரசியல் சட்டத்தை இயற்றியவர்கள் பாதுகாப்பாக வைத்திருக்கின்றார்கள். ஆனால், இன்றைக்கு தமிழ்நாடு சட்டமன்றத்தின் இறையாண்மையை, சட்டம் இயற்றக்கூடிய அதிகாரத்தை, அரசமைப்புச் சட்டம் வகுத்துக் கொடுத்திருக்கக்கூடிய கூட்டாட்சி முறையை கேள்விக்குறியாக்கக்கூடிய வகையில் நீட் மசோதாக்கள் *27* மாதங்களாக கிடப்பிலே உறங்கிக்கொண்டிருக்கின்றன.

[திரு. மு.க. ஸ்டாலின்] [*2019 ஜூலை 8*

இத்தகைய நீண்ட நெடிய தாமதம் இதற்கு முன்பு வரலாற்றிலே ஏற்பட்டிருக்கிறதா என்பது சந்தேகத்திற்குரியதாக அமைந்திருக்கிறது. நாமெல்லாம் நீட் விலக்கு மசோதாக்களுக்கு குடியரசுத் தலைவர் அவர்களுடைய ஒப்புதலைப் பெற்றுத் தாருங்கள் என்று மத்திய அரசை, சட்டமன்றம் மூலமாகவும், ஏன் பாராளுமன்றத்தின் இரு அவைகள் மூலமாகவும் கேட்டுகொண்டிருந்த நேரத்தில் எல்லாம், மௌனம் சாதித்திருக்கக்கூடிய பா.ஜ.க. அரசு, இப்போது திடீரென்று உயர் நீதிமன்றத்தில் நடைபெற்ற வழக்கிலே, தமிழக நீட் மசோதாக்கள் நிராகரிக்கப்பட்டுவிட்டன என்று ஓர் அறிவிப்பை வெளியிட்டிருக்கிறது. எனவே, இது தமிழகத்தை ஒரு மிகப் பெரிய அதிர்ச்சிக்கு உள்ளாக்கி இருக்கிறது. மசோதாக்கள் நிராகரிக்கப்பட்டது குறித்த தகவலைக்கூட மாநில சட்டமன்றத்திற்குத் தெரிவிக்க வேண்டும் என்ற அடிப்படைக் கண்ணியம்கூட காணாமல் போயிருக்கிறது. அதுதான் உள்ளபடியே வேதனைக்குரிய ஒன்றாக அமைந்திருக்கிறது. கூட்டுறவு, கூட்டாட்சி என்று சொல்லிக்கொண்டு கூட்டுறவு, கூட்டாட்சித் தத்துவமும் குழித் தோண்டி புதைக்கப்பட்டிருக்கிறது. இது அரசமைப்புச் சட்டத்திற்கு ஒரு மிகப் பெரிய அநீதி என்பதை நான் இந்த அவையில் பதிவு செய்ய விரும்புகிறேன்.

முற்பகல் 11–20

ஆகவே, அரசமைப்புச் சட்டப்படி சட்டமன்றத்திற்கு இறையாண்மை அடிப்படையில் அளிக்கப்பட்டிருக்கக்கூடிய சட்டமியற்றும் முக்கியமான அதிகாரம் பறிக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, மாநில மக்கள் மன்றமாக விளங்கிக் கொண்டிருக்கக்கூடிய இந்தச் சட்டமன்றத்தினுடைய ஆணிவேர் இன்றைக்கு மாய்க்கப்பட்டிருக்கிறது. மத்திய அரசின் இந்த விநோதமான செயல், மிக மிக கண்டனத்துக்குரியது என்பதை நான் இந்த அவையில் பதிவு செய்கிறேன். குறிப்பாக, நீட் தேர்வால் ஏற்பட்ட ஏமாற்றத்தால் மனம் ஒடிந்துபோய் தமிழகத்திலே பல மாணவியர் தற்கொலை செய்து கொண்டிருக்கக்கூடிய கொடுமை, கண்ணீரை வரவழைக்கக்கூடிய இந்தக் கையறு நிலையில், சட்டமன்றத்திலே பிரதிபலிக்கப்பட்ட தமிழக மக்களுடைய ஆழமான உணர்வுகளை மத்திய பா.ஜ.க. அரசு மதிக்கத் தவறியிருக்கிறது. ஆகவே, நீட் தேர்விலிருந்து விலக்கு அளிக்கக்கூடிய மசோதாக்கள் இரண்டிற்கும் உடனடியாக குடியரசுத் தலைவரின் ஒப்புதலைப் பெற்றுத் தர வேண்டும் என மத்திய அரசை வலியுறுத்தி இந்த அவையில்

2019 ஜூலை 8] [திரு. மு.க. ஸ்டாலின்]

ஏகமனதாக ஒரு தீர்மானத்தை நிறைவேற்றிட வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

சட்டமன்றத்தின் சட்டமியற்றும் உயர்ந்த அதிகாரத்தை சாதாரணமாக சிறுமைப்படுத்தி, தமிழக மக்களுடைய உணர்வுகளுக்கு அவமானம் செய்திருக்கக்கூடிய மத்திய பா.ஜ.க. அரசுக்கு எதிராக ஒரு கண்டனத் தீர்மானம் கொண்டுவந்து, இந்த அவையிலே ஒருமனதாக நிறைவேற்றிட வேண்டும். மேலும், மக்களுடைய நலன் பேணவும், இந்த மாநிலத்தினருடைய உணர்வை மதிக்கவும், அவர்களுடைய விருப்பத்தையும், எதிர்பார்ப்பையும் நிறைவேற்றவும் சட்டமன்றத்திற்கு இருக்கக்கூடிய இறையாண்மையைப் பாதுகாத்திட சட்டபூர்வமான மாமருந்து தேடி, தமிழக அரசு உடனடியாக உச்ச நீதிமன்றத்தையும் அணுக வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். இதில் தாமதம் செய்தாலோ, தயக்கம் காட்டினாலோ, வரலாற்றுப் பிழையை இழைத்தவர்களாக ஆகிவிடுவீர்கள். எதிர்கால ஜனநாயக சமூகம் இதை மறக்காது, மன்னிக்காது என்று எச்சரிக்கை செய்வதோடு மட்டுமல்ல, இதுகுறித்து கண்டனத் தீர்மானத்தை உடனடியாக இந்த அரசு கொண்டுவர வேண்டும் என்பது மட்டுமல்ல, உடனடியாக இதை உச்ச நீதிமன்றத்திற்குக் கொண்டு செல்ல வேண்டும் என்று நான் அரசை கேட்டு அமைகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கரி. இராமசாமி அவர்கள்.

முற்பகல் 11–25

திரு. கரி. இராமசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மன்றத்தில் நாம் எல்லோரும் ஒன்றாகச் சேர்ந்து நீட் தேர்வு தமிழகத்திற்கு வேண்டாம் என்ற தீர்மானத்தை நிறைவேற்றி அனுப்பியிருந்தோம். ஆனால், அதன் முடிவு என்ன என்பதை நாம் தெரிந்துகொள்வதற்கு முன்பாக நீதிமன்றத்தின் வழியாக அது மறுக்கப்பட்டுவிட்டதாக தகவல்கள் சொல்கின்றன. உண்மையிலேயே, இதில் நன்றாக சிந்தித்துப் பார்க்கும்போது, இந்த முடிவு எடுத்தது, நம்முடைய அரசுக்குத் தெரியுமா, தெரியாதா? மத்திய அரசு எடுத்த முடிவு உங்களுக்குத் தெரியுமா, தெரியாதா என்பது எனக்குத் தெரியவில்லை. எந்தத் தகவலையும் மத்திய அரசு நமக்குச் சொல்லவில்லை. இந்த நீட் தேர்வால் பல மாணவர்கள் உயிரிழந்திருக்கிறார்கள். இதையெல்லாம் பொருட்படுத்தாமல்,

[திரு. கரி. இராமசாமி] [*2019 ஜூலை 8*

இந்த மசோதாவை நாம் அனுப்பியபோது, அதைத் திருப்பி அனுப்பிவிட்டார்கள். இதை நாம் கண்டிப்பதைத் தவிர வேறு வேலையே இதில் கிடையாது. நிச்சயமாக நீங்களும் எங்களுடன் ஒன்றாக இணைந்து, எல்லோருமாகச் சேர்ந்து, மத்திய அரசுக்கு எதிராகக் கண்டனத் தீர்மானத்தை இங்கே கொண்டு வர வேண்டும். இதுபோன்று, மத்திய அரசு அரைகுறையாக செயல்புரியக்கூடிய செயல்கள் தமிழகத்தில் தொடர்ந்தால், தமிழகம் ஓர் ஒதுக்கப்பட்ட மாநிலமாக மாறிவிடும். இதற்கு உரிய நடவடிக்கையை இந்த அரசு எடுக்க வேண்டும். இப்பொழுதே நாம் மத்திய அரசுக்கு எதிராக கண்டனத் தீர்மானத்தை நிறைவேற்ற வேண்டுமென்று கேட்டு, அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடு) மாண்புமிகு திரு. முஹம்மது அபூபக்கர், நீங்கள் கவன ஈர்ப்பு அறிவிப்பு கொடுக்கவில்லை. கவன ஈர்ப்பு அறிவிப்பு கொடுக்காதவர், திடீரென்று raise செய்தால் நான் எப்படி அனுமதிக்க முடியும்? (குறுக்கீடு) வாய்ப்பு இல்லை. நீங்கள் சற்று பொறுங்கள். அவையில் எந்த விஷயத்தை raise செய்வதாக இருந்தாலும், என்னிடத்தில் அனுமதி பெற்றிருக்க வேண்டும்; அல்லது கவன ஈர்ப்பு அறிவிப்பைக் கொடுத்திருக்க வேண்டும். நீங்கள் எந்தவிதமான அனுமதியையும் பெறாமல், இந்த விஷயத்தில் பேச வேண்டுமென்றால் நான் எப்படி அனுமதி வழங்க முடியும்? மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும், மாண்புமிகு சட்டமன்ற காங்கிரஸ் கட்சித் தலைவர் அவர்களும் NEET தேர்வு குறித்து இயற்றப்பட்ட மசோதாக்கள் குறித்து பல்வேறு கருத்துகளை இந்த அவையிலே சொன்னார்கள். சட்டமன்ற காங்கிரஸ் கட்சித் தலைவர் அவர்கள் மத்திய அரசைக் கண்டிக்க வேண்டுமென்று பல்வேறு கருத்துகளையெல்லாம் சொன்னார்கள். அப்படியெல்லாம் நாம் கண்டிக்கின்றபோது, நாம் யாரை முதலிலே கண்டிக்க வேண்டும் என்பது பற்றியெல்லாம் நான் இந்த அவையிலே பதிவு செய்ய வேண்டிய கட்டாயத்திலே இருக்கின்றேன்.

2019 ஜூலை 8] [டாக்டர் சி. விஜய பாஸ்கர்]

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த விஷயம் குறித்துப் பேசுவதற்கு நீங்கள் எனக்கு மூன்று நிமிடங்கள் வாய்ப்புத் தர வேண்டும். காரணம் என்னவென்றால், இதனுடைய history–ஐ நாம் பார்க்க வேண்டும். பல முறை இதுகுறித்த விவாதம் அவையில் வருகிறபோது, கேட்கப்பட்ட கேள்விகளுக்கு மட்டும் நான் சரியாகப் பதில் சொல்லிவிட்டு அமர்ந்துவிடுவேன். இந்த விஷயம் குறித்த history–ஐ மாண்புமிகு உறுப்பினர்கள் தெரிந்துகொள்ள வேண்டும். ஆகையால், இரண்டு நிமிடங்கள் பேச அனுமதிக்க வேண்டும். ஏற்கெனவே, நம்முடைய தமிழ்நாட்டில் என்ன நடைமுறை இருந்தது? 1994–1995 ஆம் ஆண்டிலிருந்து 2005 ஆம் ஆண்டு வரைக்கும் +2 தேர்வுக்குப் பிறகு, அண்ணா பல்கலைக்கழகத்தினுடைய entrance examination என்கிற நடைமுறைதான் இருந்து வந்தது. 2005 ஆம் ஆண்டில் அவ்வாறு இருந்த நடைமுறையை மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான் முதன்முதலாக மாற்றினார்கள். தமிழ்நாட்டில் +2 examination வெளிப்படையாக, நேர்மையாக நடத்தப்படுகிறது, அதனால் இன்னொரு entrance examination நம்முடைய தமிழ்நாட்டுக்குத் தேவையில்லை என்கிற ஒரு கொள்கை முடிவை தமிழகத்தில் முதன்முதலாக எடுத்த தலைவி, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் (மேசையைத் தட்டும் ஒலி) அப்படி ஒரு கொள்கை முடிவை எடுத்து என்ன செய்தார்கள்? தமிழ்நாட்டில் பொது நுழைவுத் தேர்வு என்கிற ஒரு கொள்கை முடிவை முதலில் இரத்து செய்தது மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) +2 மதிப்பெண்களை மட்டும் அடிப்படையாகக் கொண்டு, மாணவர்களை மருத்துவப் படிப்பிற்குத் தேர்வு செய்ய வேண்டுமென்று முதன்முதலாக மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 2005 ஆம் ஆண்டில் ஓர் அரசாணையை வெளியிட்டார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இதுதான் history. ஆக, இந்தக் கொள்கைக்கு வித்திட்டவர் யார்? மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள். இந்தக் கொள்கையில் உறுதியாக நின்றது யார்? மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள். இதைச் செய்ததற்குப் பிறகு ஆட்சி மாற்றம் ஏற்படுகிறது. 2006 ஆம் ஆண்டில் திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிக்கு வருகிறது. ஆட்சிக்கு வந்தவுடனே மாண்புமிகு அம்மா அவர்கள் கொண்டு வந்த அந்தச் சட்டத்தை என்ன செய்கிறார்கள்? உயர் நீதிமன்றத்தில் பிரியதர்ஷினி என்கிற ஒரு மாணவி ஒரு வழக்கு தொடுக்கிறார். மாண்புமிகு அம்மா அவர்கள் கொண்டு வந்த இந்த அரசாணையை எதிர்த்து ஒரு

[டாக்டர் சி. விஜய பாஸ்கர்] [2019 ஜூலை 8

வழக்கு தொடர்கிறார். தயவுசெய்து, NEET தேர்வு குறித்த இந்த history–ஐ தமிழ்நாடு முழுவதும் எடுத்துச் சொல்ல வேண்டும். திடீரென்று, காங்கிரஸ் NEET–லிருந்து விலக்கு வேண்டுமென்று உடனே கேட்கிறார்கள். திராவிட முன்னேற்றக் கழகம் விலக்கு வேண்டுமென்று கேட்கிறது. அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசின் சார்பாக நாங்கள்தான் NEET தேர்வை விலக்குவதில் உறுதியாக இருக்கிறோம் என்று சொல்கிறோம். இந்த விஷயம் இந்த மன்றத்திற்குத் தெரிய வேண்டும்; பத்திரிகை ஊடகங்களுக்குத் தெரிய வேண்டும்; நாட்டு மக்களுக்கு இதனுடைய பின்னணி தெரிய வேண்டும். இந்த விஷயத்தில் யார் அரசியல் செய்கிறார்கள்? யார் கொள்கையிலே உறுதியாக இருக்கிறார்கள் என்பது தயவுசெய்து தெரிய வேண்டும். அதற்காகத்தான் இந்தக் கருத்தைச் சொல்கிறேன்.

திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய ஆட்சி வருகிறது. ஆட்சி வந்ததற்குப் பிறகு உயர் நீதிமன்றத்தில் இந்த case வருகிறது. உயர் நீதிமன்றத்தினுடைய அமர்வு மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கொண்டு வந்த அந்தச் சட்டத்தை இரத்துச் செய்கிறார்கள். எப்பொழுது இரத்து செய்கிறார்கள்? 2006 ஆம் ஆண்டில் இரத்துச் செய்கிறார்கள். 2006 ஆம் ஆண்டில் இரத்துச் செய்தவுடனே திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய ஆட்சியில் என்ன செய்கிறார்கள்? இதற்காக அனந்தகிருஷ்ணன் கமிட்டி என்ற ஒரு குழுவை அமைத்து, பொது மக்களிடம் இதுகுறித்து கருத்து கேட்கிறார்கள். கருத்து கேட்டபோது, "ஏற்கெனவே மாண்புமிகு அம்மா அவர்கள் எடுத்த அந்தக் கொள்கை முடிவுக்கு எல்லோரும் ஆதரவாகக் கருத்து தெரிவித்து நமக்கு நுழைவுத் தேர்வு வேண்டாம். +2 மதிப்பெண்கள் அடிப்படையில் நமக்கு அட்மிஷன் நடக்க வேண்டும்" என்கிற கருத்தை பொதுமக்கள் அனைவரும் தெரிவிக்கிறார்கள். தெரிவிக்கப்பட்ட அந்தக் கருத்தின் அடிப்படையில் திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய சார்பில் குடியரசுத் தலைவர் அவர்களுடைய ஒப்புதல் வரைக்கும் பெறப்படுகிறது. இது திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய ஆட்சியில் நடைபெற்ற நல்ல விஷயம். மாண்புமிகு அம்மா அவர்கள்தான் இதைத் தொடங்கி வைத்தார்கள். தொடங்கி வைக்கப்பட்ட பிறகு, நீதிமன்றத்தில் வழக்கு வருகிறது. வழக்கு வந்ததற்குப் பிறகு அவர்கள் ஒப்புதல் வாங்குகிறார்கள். (குறுக்கீடு) ஒரு நிமிடம் பொறுங்கள். மாண்புமிகு உறுப்பினர்கள் history–ஐத் தெரிந்துகொள்ள வேண்டும். அதற்குப் பிறகு, எங்கே பிரச்சினை

2019 ஜூலை 8] [டாக்டர் சி. விஜய பாஸ்கர்]

பூதாகரமாக வெடிக்கிறது என்பதைத் தயவுசெய்து மாண்புமிகு உறுப்பினர்கள் புரிந்துகொள்ள வேண்டும். தொடர்ந்து இந்த அவையிலே மாண்புமிகு உறுப்பினர்கள் பேசுகிறார்கள். காங்கிரஸ் கட்சிக்கு இதைப் பற்றிப் பேசுவதற்கு எந்தவிதமான தார்மீக உரிமையும் எந்தக் காலத்திலும் கிடையாது; (மேசையைத் தட்டும் ஒலி) எந்தக் காலத்திலும் கிடையாது.

முற்பகல் 11–30

காங்கிரஸ் கட்சி ஆட்சிக்கு வருகிறது. நீங்கள்தான் மத்தியில் ஆட்சியில் இருந்தீர்கள். ஆட்சியில் இருந்தபோது 2010 ஆம் ஆண்டில் திராவிட முன்னேற்றக் கழகம் உங்களுடன் கூட்டணியில் இருந்தது. அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம், ஆட்சி அதிகாரத்தில் இல்லை. என்ன செய்கிறீர்கள் என்றால், Medical Council of India–இந்திய மருத்துவக் குழுமம் 27–12–2010–ல் மருத்துவப் படிப்பிற்கும், மருத்துவ மேற்படிப்பிற்கும் நுழைவுத் தேர்வினை அறிமுகப்படுத்தக்கூடிய அறிவிக்கையினை MCI–னுடைய Notification–ஐ மத்திய அரசின் gazette–ல் வெளியிடுகிறீர்கள். நாம் காவேரி திட்டத்தை gazette–ல் வெளியிடச் சொல்லி எத்தனை நாள் கூறியிருந்தோம்? அதையெல்லாம் வெளியிடவில்லை. ஆனால், NEET என்கிற National Eligibility cum Entrance Test–ஐ முதன்முதலாக அறிமுகப்படுத்தியது காங்கிரஸ் ஆட்சி. (மேசையைத் தட்டும் ஒலி) எப்படி நீங்கள் சட்டமன்றப் பேரவையில் பேசுகிறீர்கள்? இதனைக் கொண்டு வந்தது காங்கிரஸ் ஆட்சிதான். நீங்கள்தான் MCI Notification–ஐ 2010 ஆம் ஆண்டில் போட்டீர்கள். அப்போது திராவிட முன்னேற்றக் கழகத்துடனான alliance–ல்தான், அதாவது கூட்டணியில் இருந்தீர்கள். ஆனால், அப்போது மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் எதிர்க்கட்சித் தலைவராக இருந்தார்கள். மாண்புமிகு அம்மா அவர்கள் என்ன சொன்னார்கள் என்றால், "எங்கள் கொள்கையின் அடிப்படையில் NEET வேண்டாம். காங்கிரஸ் ஆட்சியில் MCI Notification போட்டீர்கள். இந்தியா முழுவதும் Notification கொண்டு வந்தீர்கள். அனைத்து மாநிலங்களைப் பற்றி எங்களுக்குக் கவலை இல்லை, தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில் குறைந்தபட்சம், தமிழகத்திற்கு மட்டுமாவது இந்த NEET தேர்விலிருந்து விலக்கு கொடுங்கள்" என்று எதிர்க்கட்சித் தலைவராக இருந்து, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் வலியுறுத்தினார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) ஆனால், காங்கிரஸ் கட்சி கேட்கவில்லை.

[டாக்டர் சி. விஜய பாஸ்கர்] [2019 ஜூலை 8

நீங்கள் Notification போட்டீர்கள், Gazette–ல் போட்டீர்கள். இதுதான் வரலாறு. இதற்குப் பிறகு மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் உச்ச நீதிமன்றத்தில் வழக்கு தொடுத்தார்கள். MCI Notification–ஐ எதிர்த்து உச்ச நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்ததற்கு காங்கிரஸ் Notification–ஐக் கொண்டு வந்ததுதான் காரணம். NEET வந்ததற்குக் காரணமே இதுதான். (குறுக்கீடுகள்) இருங்கள், நான் சொல்லி முடித்துவிடுகிறேன். (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர்கள், அமைதியாக உட்காருங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமசாமி, உட்காருங்கள். (குறுக்கீடுகள்) இல்லை. (குறுக்கீடுகள்) சொல்வதைக் கேளுங்கள். (குறுக்கீடுகள்) NEET சம்பந்தமாக நீங்களும், மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும் சில விளக்கங்களைக் கேட்டிருக்கிறீர்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அரசின் சார்பாக அதற்கான விளக்கத்தைச் சொல்கிறார்கள். (குறுக்கீடுகள்) முழுமையாகக் கேட்டுவிட்டு அதன் பிறகு ஏதாவது விளக்கம் தேவையாக இருந்தால். . . (குறுக்கீடுகள்) பிறகு பார்ப்போம். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்வதைக் கேளுங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு அமைச்சர் அவர்களின் முழு விளக்கத்தையும் கேளுங்கள். (குறுக்கீடுகள்) சொல்வதைக் கேளுங்கள், மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமசாமி அவர்களே. . . (குறுக்கீடுகள்) மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முழு விளக்கத்தைச் சொல்கிறார். (குறுக்கீடுகள்) நீங்கள் கேளுங்கள். (குறுக்கீடுகள்) அதற்குப் பிறகு நீங்கள் ஏதாவது சொல்ல வேண்டுமென்றால் பிறகு யோசிக்கலாம். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, Notification போடவில்லை என்று சொல்கிறார்களா? (குறுக்கீடுகள்) Notification போடவில்லை என்று சொல்கிறீர்களா? (குறுக்கீடுகள்) அப்படியானால் நாங்கள் Notification போடவில்லை என்று சொல்லுங்கள்; Argue செய்யுங்கள். (குறுக்கீடுகள்) நாங்கள் ready. மாண்புமிகு உறுப்பினர், Notification–ஐ போடவில்லை என்று சொல்கிறீர்களா? (குறுக்கீடுகள்) காங்கிரஸ் ஆட்சியில் Notification–ஐ போட்டீர்கள் என்று நான் சொல்கிறேன். நீங்கள் என்ன சொல்ல வருகிறீர்கள்?

2019 ஜூலை 8]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும், மாண்புமிகு சட்டமன்ற காங்கிரஸ் கட்சித் தலைவர் அவர்களும் NEET தேர்வு குறித்த விளக்கத்தை அரசிடம் கேட்டார்கள். அந்த விளக்கத்தை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் விளக்கமாக சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். இது முழு விளக்கம். இந்த விளக்கத்தை ஆரம்பத்திலிருந்து கடைசி வரையில் கேட்டால்தான் முழு விவரமும் தெரியும். இடையில் நீங்கள் பேசுவது தவறு. விளக்கம் என்ன என்பதை இந்த அவை தெரிந்துகொள்ள வேண்டும். நீங்கள் விளக்கத்தைக் கேட்டீர்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தக்க விளக்கத்தை அளித்துக் கொண்டிருக்கிறார், பொறுமையாகக் கேளுங்கள்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,* Notification *வெளியிடப்பட்டவுடன் நம்முடைய மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள். இதுகுறித்து மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களுக்கு தொடர்ந்து கடிதம் எழுதினார்கள். ஒன்று, நீங்கள்* Notification *போட்டீர்கள்; 'அதனை* effect*–க்குக் கொண்டு வராதீர்கள். அதனை அப்படியே விட்டுவிடுங்கள், அது தேவையில்லை' என்று சொன்னார்கள். ஆனால், அதனை* effect*–க்குக் கொண்டு வருவதற்கு காங்கிரஸ் அரசால் அனைத்து நடவடிக்கைகளும் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வந்தன. பிறகு அம்மா அவர்கள் "நீங்கள் இத்தேர்விலிருந்து தமிழ்நாட்டுக்கு விலக்கு* exemption *கொடுங்கள்" என்று மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களை நேரில் சந்தித்தும், கடிதம் மூலமும் எழுதினார்கள். ஒருபுறம் மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களை நேரில் சந்தித்தும் அழுத்தம் கொடுத்தார்கள். அரசியல் அழுத்தம் கொடுத்தார்கள். கடிதம் எழுதினார்கள். அதனைத் தொடர்ந்து* follow *செய்தார்கள்; இன்னொருபுறம் சட்டரீதியாக உச்ச நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்தார்கள். உச்ச நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்தவுடன், உச்ச நீதிமன்றத்திலிருந்து ஓர் இடைக்கால நிகழ்வாக, ஒரு தீர்ப்பு 13–12–2012 அன்று வந்தது.*

[டாக்டர் சி. விஜய பாஸ்கர்] [2019 ஜூலை 8

தமிழகத்தில் மீண்டும் ஆட்சி மாற்றம் வந்தது. 2012 ஆம் ஆண்டில் மீண்டும் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சிக்கு வந்தவுடனே, மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களை நேரில் சந்தித்து அழுத்தம் கொடுத்தாலும், கடிதம்மூலம் அழுத்தம் கொடுத்தாலும், வலியுறுத்தினாலும் அவற்றையெல்லாம் தாண்டி, மாண்புமிகு அம்மா அவர்கள் சட்டப் பாதுகாப்பு வேண்டும் என்பதற்காக, உச்ச நீதிமன்றம் சென்று இடைக்கால நிகழ்வு பெறப்பட்டது. அதில் மாநிலங்கள் மற்றும் கல்வி நிறுவனங்களை அந்தந்த மாநிலங்களின் கொள்கைக்கேற்ப நுழைவுத் தேர்வுகளை நடத்திக்கொள்ளலாம் என்று 13–12–2012–ல் ஓர் உத்தரவு பெற்றோம். இந்தத் தீர்ப்பிலும் மாண்புமிகு அம்மா அவர்கள் திருப்தியாக இல்லை. அதற்கு இடைக்கால உத்தரவுதானே பெற்றிருக்கிறோம் என்பதால், உச்ச நீதிமன்றத் தலைமை நீதிபதியின் அமர்வில் மாண்புமிகு அம்மா அவர்கள் முறையிட்டார்கள், உச்ச நீதிமன்றத்தின் Constitutional Bench–ல் அம்மா முறையிட்டு, ஒரு வரலாற்றுச் சிறப்புமிக்கத் தீர்ப்பை மாண்புமிகு அம்மா அவர்கள் இந்த நாட்டிற்கே பெற்றுத் தந்தார்கள். 18–7–2013 அன்று இந்த NEET தேர்வே வேண்டாம் என்று உச்ச நீதிமன்றம் ஒரு தீர்ப்பளித்திருக்கிறது. அந்தத் தீர்ப்பைப் பெற்றுக் கொடுத்தவர் மாண்புமிகு அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு அம்மா அவர்கள் ஆட்சியில் பெற்றுத் தந்தார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இந்த வரலாறு பத்திரிகைகளுக்கும், ஊடகங்களுக்கும், இந்த மன்றத்திற்கும் தெரிய வேண்டும். அப்படித் தீர்ப்பு பெற்றவுடன் +2 மதிப்பெண்கள் அடிப்படையில் திரும்பவும் எந்தவிதமான இடையூறும் இல்லாமல், +2 exam மதிப்பெண்கள் அடிப்படையில் மருத்துவ மாணவர் சேர்க்கை தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருந்தது. ஆகவே, மீண்டும் ஆட்சிக்கு வந்தவுடனே, இதை உறுதிப்படுத்தியது மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள்.

முற்பகல் 11–35

உச்ச நீதிமன்றத்தின் Bench–க்குப் போய் தலைமை அமர்வு நீதிபதியிடம் போராடி, வாதாடி சட்டப் பாதுகாப்பை உறுதி செய்து, ஒரு வரலாற்றுச் சிறப்புமிக்க தீர்ப்பைப் பெற்றுத் தந்ததற்குப் பின்பும், நீங்கள் சார்ந்திருக்கின்ற காங்கிரசின் மத்திய அரசு, மறு ஆய்வு மனுவை மீண்டும் தாக்கல் செய்கிறது. எப்போது தாக்கல் செய்கிறார்கள்? 16–7–2013–ல் மறு சீராய்வு மனுவைத் தாக்கல் செய்கிறார்கள். அதற்கு மாண்புமிகு அம்மா அவர்கள்

2019 ஜூலை 8] [டாக்டர் சி. விஜய பாஸ்கர்]

என்ன சொன்னார்கள் என்றால், "நீங்கள்தான் notification போட்டீர்கள், நீங்கள்தான் NEET–ஐக் கொண்டு வந்தீர்கள், நான் வேண்டாமென்று சொன்னேன், நான் கடிதம்கூட எழுதினேன். நேரில் பார்த்தேன். மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களிடம் வலியுறுத்தினேன். தமிழ்நாட்டில் NEET வேண்டாமென்ற கொள்கை முடிவைச் சொல்கிறேன். தமிழக மக்களுக்காகப் பேசுகிறேன். மத்திய அரசு காதிலே வாங்கிக் கொள்ளவில்லை. நான் உச்ச நீதிமன்றத்திற்குச் சென்று, உச்ச நீதிமன்றத்தில் முறையிட்டு இடைக்காலத் தீர்ப்பு வாங்கினேன். அதையும் கேட்கவில்லை. அந்த வழக்கில் நான் இறுதித் தீர்ப்பையும் பெற்றேன். தயவுசெய்து, இறுதி தீர்ப்பின்மீது சீராய்வு மனு Revision Petition போடாதீர்கள்" என்று கேட்டு கடிதம் எழுதுகிறார்கள். தயவுசெய்து கேளுங்கள், இந்த வரலாற்றை உறுப்பினர்கள் தெரிந்துகொள்ள வேண்டும். இந்த வரலாற்றை நீங்கள் மறைத்துவிட்டு, NEET, NEET என்று பேசிக் கொண்டே இருக்கிறீர்கள். இந்த வரலாற்றைச் சொல்ல வேண்டிய கட்டாயத்தில் நான் இருக்கிறேன். பத்திரிகைகள், ஊடகங்கள் மூலமாக இந்த நாட்டு மக்களுக்குத் தெரிய வேண்டும். மறு ஆய்வு மனுவை எதிர்த்து புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தமிழ்நாட்டின் சார்பாக எதிர் மனுவைத் தாக்கல் செய்தார்கள். எனவே, இதில் எங்கேயும் தொய்வு இருக்கிறதா? (மேசையைத் தட்டும் ஒலி) இந்த NEET பிரச்சினை தொடங்கியதிலிருந்து, NEET பிரச்சினை உருவானதிலிருந்து புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசாங்கம் எடுத்த முயற்சியில் எள் முனை அளவுகூட தொய்வு இல்லை. மறு ஆய்வு மனு போடுகிறார்கள். உச்ச நீதிமன்றத் தீர்ப்பின்படி செயல்படுமாறும், உச்ச நீதிமன்றத்திலே தாக்கல் செய்த மறு ஆய்வு மனுக்களை திரும்பப் பெறக் கோரியும் முன்னாள் பாரதப் பிரதமர் அவர்களுக்கு, உங்கள் பாரதப் பிரதமர் அவர்களுக்கு, காங்கிரஸ் பாரதப் பிரதமர் அவர்களுக்கு 28–7–2013 அன்றும், அதற்குப் பின்னர் இருந்த முன்னாள் பாரதப் பிரதமர் அவர்களுக்கு 3–6–2014, அதற்குப் பிறகு 7–10–2015, 9–2–2015, 9–3–2016 ஆகிய தேதிகளில். . . (குறுக்கீடு) கடிதம் எழுதியது உண்மைதான். வரலாற்று உண்மையை யாரும் மறுக்க முடியாது. யாரும் argue பண்ண முடியாது. (குறுக்கீடுகள்) அடுத்த பாரதப் பிரதமர் அவர்கள். . . (குறுக்கீடுகள்) அதற்குப் பின்னர் வந்த பாரதப் பிரதமர் அவர்களுக்குக் கடிதம் எழுதப்பட்டது. (குறுக்கீடுகள்)

[*2019 ஜூலை 8*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *இப்படி எல்லோரும் பேசினால் எப்படி? மாண்புமிகு உறுப்பினர்கள் இருங்கள், இருங்கள். நீங்கள் சொன்னதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்கிறார்.*

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர்: *மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கடிதம் எழுதினார்கள். அதற்குப் பின்னர், நீங்கள் போட்ட சீராய்வு மனு ஆய்விற்கு வருகிறது. மாண்புமிகு அம்மா அவர்கள் உச்ச நீதிமன்ற* Bench*–ல் தீர்ப்பு வாங்கிவிட்டார்கள். உச்ச நீதிமன்றத் தலைமை நீதிபதி* NEET *தமிழகத்திற்கு வேண்டாமென்று இறுதித் தீர்ப்பு கொடுத்துவிட்டார்கள். அதற்குப் பிறகு எப்படி வழக்கு விசாரணைக்கு வரும்? நீங்களெல்லாம் வழக்குரைஞர்கள்தான். எப்படி* case *மீண்டும் விசாரணைக்கு வரும்? நீங்கள் போட்ட சீராய்வு மனு,* Revision Petition *விசாரணைக்கு வருகிறது. அப்போது தேர்தல் வந்துவிட்டது. இருந்தாலும்கூட, தேர்தல் வந்தாலும்கூட, கொண்ட கொள்கையில் உறுதியாக இருந்து, இந்தியாவிலே உள்ள மூத்த வழக்குரைஞர்கள் அத்துணை பேரையும் வைத்து வாதாடினார்கள், புரட்சித் தலைவி அம்மா அவர்கள்.* Revision Petition *விசாரணைக்கு வந்தபோது, அப்போதைய சுகாதாரத் துறைச் செயலாளர் அவர்கள் டெல்லியிலேயே 15 நாட்கள் தங்கியிருந்து, சுப்ரீம் கோர்ட்டில் உள்ள மூத்த வழக்குரைஞர்களை வைத்து,* Revision Petition *வந்தபோது, அதிலே நாம் வாதாடினோம். அதில் என்ன நடக்கிறது என்றால், சங்கல்ப் என்ற தொண்டு நிறுவனம் தொடர்ந்த வழக்கில், அப்போதிருந்த தலைமை நீதிபதி இந்த* case*–ஐ* suo motu *ஆக எடுக்கிறார்கள். எல்லா வழக்குரைஞர்களுக்கும் தெரியும். இங்குள்ள சட்டமன்ற உறுப்பினர்கள் நிறைய பேர் வழக்குரைஞர்கள்.* Suo motu*–வாக இந்த* case*–ஐ எடுக்கிறார்கள். தமிழகத்திற்கு* NEET *வேண்டாமென்று தீர்ப்பு வந்த பின்னாலும்,* Revision Petition*–ல்* suo motu *ஆக இந்த* case*–ஐ எடுத்து சங்கல்ப் என்ற தொண்டு நிறுவனம் தொடுத்த வழக்கிலே, விவாதம் செய்து, எந்தக் கருத்தையும் கேட்காமல், மிகச் சிறந்த சட்ட நிபுணர்களை வைத்துப் போராடியும், ஏற்கெனவே பெற்ற தீர்ப்பை, உச்ச நீதிமன்றத்தின் தலைமை நீதிபதி அமர்வு கொடுத்த தீர்ப்பை மீண்டும் இரத்து செய்து* NEET*–ஐக் கொண்டு வருகிறார்கள். இதுதான்* NEET*–ல் நடந்த வரலாறு. இதுதான் நடந்த உண்மை. இதற்கு யார் காரணம்? அதற்குத்தான் மாண்புமிகு அம்மா அவர்கள் கேட்டார்கள். "நான் முதன்முதலில்* NEET *–ஐ இரத்து செய்தேன். அதற்குப் பிறகு திராவிட முன்னேற்றக்*

2019 ஜூலை 8] [டாக்டர் சி. விஜய பாஸ்கர்]

கழகக் கூட்டணியில் இருந்த மத்திய காங்கிரஸ் அரசு, நீங்கள்தான் முதன் முதலில் NEET நுழைவுத் தேர்வைக் கொண்டு வந்தீர்கள். தும்பை விட்டுவிட்டு வாலை ஏன் பிடிக்கிறீர்கள்?" என்று புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கேட்டார்கள். எப்போதும் மாண்புமிகு அம்மா அவர்கள் சொல்கிற பழமொழி. (மேசையைத் தட்டும் ஒலி) NEET விஷயத்தில், அம்மா அவர்களிடம் யாரும் பேச முடியாது. தும்பை விட்டுவிட்டு வாலைப் பிடிப்பது என்று புரட்சித் தலைவி அம்மா அவர்கள் சொல்வார்கள். அதைத்தான் நீங்கள் செய்திருக்கிறீர்கள். இருந்தாலும்கூட, இவ்வளவு நிகழ்வுகள் நடந்தும், NEET exam நடக்கிறது. இது வரலாற்று உண்மை, இதை யாரும் மறக்க முடியாது. இதை யாரும் மறைக்க முடியாது. எல்லாமே record. இவையெல்லாம் முடிந்தது. அதன்பிறகு என்ன நடந்தது என்றால், அம்மா அவர்கள் ஓராண்டு விலக்கு பெற்றார்கள். அதற்கு effect வந்துவிட்டது. உச்ச நீதின்றத் தீர்ப்பு வந்து விட்டது. ஒன்றுமே செய்ய முடியாது. மாண்புமிகு அம்மா அவர்கள் மறுபடியும் மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களிடம் பேசி, அரசியல் அழுத்தம் கொடுத்து ஒரு வருடத்திற்கு அம்மா அவர்கள் NEET தேர்விலிருந்து விலக்கு பெற்றார்கள். இரண்டாம் வருடத்திற்கு NEET தேர்விலிருந்து விலக்கு பெற வேண்டுமென்று நீங்களும் நினைத்தீர்கள், நாங்களும் நினைத்தோம், எல்லோரும் நினைத்தோம். நம்முடைய தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், பலமுறை மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களைச் சந்தித்து அரசியல் அழுத்தம் கொடுத்து NEET தேர்விலிருந்து விலக்கு வேண்டுமென்று கேட்டார்கள். அப்போது மத்திய அரசாங்கம் சொன்னது என்னவென்றால், நீங்கள் தொடர்ந்து நிரந்தர விலக்கைக் கேட்காதீர்கள். ஓராண்டிற்கான விலக்கைக் கேளுங்கள், நாங்கள் தருகிறோம் என்று சொன்னார்கள். அவர்கள் சொன்னது உண்மை.

முற்பகல் 11–40

ஓராண்டிற்கு விலக்கு என்று மாண்புமிகு மத்திய அமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். உடனே நாம் இந்த ஓராண்டிற்கு விலக்கு பெற வேண்டுமென்று தீர்மானம் ஒன்றை நிறைவேற்றினோம். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவுறுத்தலின் பேரில், என்னோடு அரசு துறைச் செயலாளர்கள், அதாவது கிட்டத்தட்ட 5 IAS officers கொண்ட குழு ஒன்றை தலைமைச் செயலாளர் அவர்கள் டெல்லிக்கு அனுப்பி, அங்கேயிருந்து, எங்கேயும் எந்தவிதத் தொய்வுமில்லாமல், முழுமையாகப் போராடினோம்.

[டாக்டர் சி. விஜய பாஸ்கர்] [2019 ஜூலை 8

நாட்டு மக்களுக்குத் தெரியும். இந்த நீட் தேர்விற்காக போராடிக் கொண்டிருக்கும் அந்த ஏழை மாணவ, மாணவிகளையும் டெல்லிக்கு அழைத்துச் சென்று அதில் அவர்களைப் பங்கெடுக்க வைத்தோம். இரண்டு மாண்புமிகு மத்திய அமைச்சர்களின் ஒப்புதலை நாங்கள் பெற்றோம். மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்களின் ஒப்புதலைப் பெற்றோம். H.R.D. என்று சொல்லக்கூடிய உயர் கல்வித் துறையின் ஒப்புதலைப் பெற்றோம். Thiru J.P. Nadda அவர்கள், மாண்புமிகு மத்திய சுகாதாரத் துறை அமைச்சர் அவர்களிடமிருந்து ஒப்புதலைப் பெறுவதற்கு முன்னதாக, நீங்கள் சார்ந்திருக்கக்கூடிய காங்கிரஸ் இயக்கத்தின் முன்னாள் காங்கிரஸ் தலைவர், முன்னாள் மத்திய அமைச்சர் திரு. ப. சிதம்பரம் அவர்களின் மனைவி அவர்கள் தொடர்ந்த வழக்கில், நமக்கு எதிரான தீர்ப்பு வந்தது. (குறுக்கீடு) இது உண்மை. இதை யாராலும் மறுக்க முடியுமா? (குறுக்கீடு) சார், நீங்கள் தயவுசெய்து அமர்ந்துகொண்டு பேசாதீர்கள். நான் பேசிவிடுகிறேன். பின்னர் நீங்கள் பேசுங்கள், அதற்கு நான் பதில் சொல்கிறேன். (குறுக்கீடு) ஒரே ஒரு நிமிடம் இருங்கள். நான் பேசி முடித்து விடுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீட் தேர்விற்கு கடந்த முறை விலக்கு வந்திருக்கும். நாங்கள் மிகக் கடுமையாகப் போராடி, வாதாடி, ஒரு தீர்மானத்தை நிறைவேற்றி, ஒருமித்த கருத்தோடு சென்று மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களிடம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நேரடியாகப் பேசி, Chief Secretary, என்னையும் அழைத்துக் கொண்டு சென்று பேசி, இரண்டு மாண்புமிகு மத்திய அமைச்சர்களிடம் ஒப்புதலைப் பெற்று, மூன்றாவதாக மாண்புமிகு சுகாதாரத் துறை அமைச்சர் அவர்களிடம் அந்த file–லில் ஒப்புதலைப் பெறக்கூடிய நிலையில் Supreme Court–ல் திரு. ப. சிதம்பரத்தின் மனைவி திருமதி நளினி சிதம்பரம் அவர்கள் தொடர்ந்த பொது நல வழக்கில், நம்முடைய கொள்கைக்கு எதிரான தீர்ப்பு வந்தது. அதோடு அவர்கள் என்ன செய்தார்கள் தெரியுமா? வெளியில் வந்த திருமதி நளினி சிதம்பரம் அவர்கள், அப்போது எல்லா பத்திரிகையாளர்களும் இருந்தார்கள். (குறுக்கீடு) பத்திரிகையாளர்கள் மைக் நீட்டியவுடன், 'நான்தான் வாதாடினேன், இனி எந்தக் காலத்திலும் தமிழ்நாட்டில் நீட் தேர்வுக்காக விலக்கு பெறவே முடியாது. அதை நான் முடித்துவிட்டு வந்துவிட்டேன்' என்று சொன்னது திருமதி நளினி சிதம்பரம்தானே! இன்றைக்கும் Youtube–ல் வருகிறது. இப்போதுகூட நீங்கள் பார்க்கலாம். இல்லையென்றால்

2019 ஜூலை 8] [டாக்டர் சி. விஜய பாஸ்கர்]

ஓராண்டிற்கு நாங்கள் விலக்கு பெற்றிருப்போமே! காங்கிரஸ் இயக்கத்தினர் எப்படிப் பேசுகிறார்கள்? 10% reservation. இதிலேயும் நீங்கள்தான் வரவேற்கிறீர்கள். தேர்தல் அறிக்கையில், 10 சதவிகிதம் உயர் வகுப்பினருக்கு நாங்கள் கொண்டு வருவோம் என்று கூறுகிறீர்கள். தமிழ்நாட்டில் எதிர்த்துப் பேசுகிறீர்கள். காவேரிப் பிரச்சினையைப் பொறுத்தமட்டில், நீங்கள் செவி சாய்க்கவில்லை. காவேரிப் பிரச்சினை குறித்து Gazette–ல் போட வேண்டுமென்று அம்மா அவர்கள் சொன்னார்கள். நீங்கள் போடவில்லை. ஆனால், நீட் தேர்வு குறித்து நீங்கள் Gazette–ல் போடுகிறீர்கள். நாங்கள் இன்றைக்குப் போராடுகிறோம். காங்கிரஸ் இயக்கம் நேராக அங்கு சென்று வழக்கு போட்டு, அதனை நிறுத்துகிறீர்கள்! அதனை நிறுத்திவிட்டேன் என்று பெருமையாக மார்தட்டி, 'நாங்கள்தான் செய்தோம்' என்று பெருமையாகச் சொல்கிறீர்கள். எந்த முகத்தை வைத்துக்கொண்டு இந்தச் சட்டமன்றத்தில் நீட் தேர்வைப் பற்றி காங்கிரஸ் உறுப்பினர்கள் பேசுகிறார்கள் என்பதை நான் அறிய விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) அதற்குப் பின்னர் இந்தக் கருத்துக்கு நான் பதில் சொல்ல விரும்புகிறேன். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கரி. இராமசாமி, கொஞ்சம் பொறுங்கள். மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்.

திரு. மு.க. ஸ்டாலின்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கு நீட் தேர்வு பிரச்சினை குறித்து நான் கேட்ட கேள்விக்கும், அதேபோன்று காங்கிரஸ் கட்சியின் சட்டமன்றத் தலைவர் அவர்கள் கேட்ட கேள்விக்கும், மாண்புமிகு சுகாதாரத் துறை அமைச்சர் அவர்கள் விளக்கம் தந்திருக்கிறார்கள். இங்கே நான் பதிவு செய்ய விரும்புவது, காங்கிரஸ் ஆட்சியில்தான் இது கொண்டு வரப்பட்டது. நீங்கள் கூட்டணியில் இருந்தீர்கள், என்ன செய்தீர்கள் என்று கேட்டார்கள். தி.மு.க. ஆட்சி இருந்தவரைக்கும் அதை ஏற்றுக்கொள்ளவில்லை. தி.மு.க. ஆட்சி இருந்தவரைக்கும், நீட் தேர்வு என்ற பிரச்சினை தமிழ்நாட்டில் நுழைய முடியாத அளவில் தலைவர் கலைஞர் அவர்கள் பார்த்துக் கொண்டார்கள் என்பது உங்களுக்குத் தெரியும். (மேசையைத் தட்டும் ஒலி) உங்களுடைய ஆட்சியில் என்னென்ன செய்தீர்கள் என்பதை நீங்கள் பதிவு செய்தீர்கள். அதை நான் ஏற்றுக்கொள்கிறேன். அதேமாதிரி நாங்கள் செய்ததையும் நீங்கள் ஏற்றுக்கொள்ள வேண்டும்; ஏற்றுக்கொண்டுதான் இருக்கிறீர்கள். அதனை நான் மறுக்கவில்லை.

[திரு. மு.க. ஸ்டாலின்] [*2019 ஜூலை 8*

இன்றைக்கு பிரதமராக இருக்கக்கூடிய மாண்புமிகு திரு. மோடி அவர்கள் குஜராத் மாநிலத்தின் முதலமைச்சராக இருந்தபோது இந்த நீட் தேர்வை ஏற்றுக்கொள்ளவில்லை. ஆனால், அவர் இன்றைக்கு பிரதமராக வந்ததற்குப் பின்னர், அவரே இந்தத் தீர்மானத்தைக் கொண்டு வருவதற்கு மூலக் காரணமாக இருந்து கொண்டிருக்கிறார். இதையும் நீங்கள் கவனத்தில்கொள்ள வேண்டும். இதுதான் உண்மை. (குறுக்கீடுகள்) அதுமட்டுமல்ல, இன்றைக்கு உயர் நீதிமன்றம், நாம் சட்டமன்றத்தில் ஏகமனதாக நிறைவேற்றிய தீர்மானத்தை நிராகரித்திருக்கிறது. அதை ஏற்றுக்கொள்ள மறுத்திருக்கிறது. நீங்களும் மிகுந்த அளவில் அழுத்தமாக இருக்கிறீர்கள். ஏன் உங்கள் தேர்தல் அறிக்கையில்கூட இதை வலியுறுத்துவோம் என்றுதான் நீங்கள் சொல்லியிருக்கிறீர்கள். ஆகவே, நீங்களும் இதில் அழுத்தமாக இருக்கிறீர்கள். அதை நான் மறுக்கவில்லை. எனவே, நான் கேட்க விரும்புவது, உடனடியாக இதே சட்டமன்றத்தில், எந்த நம்பிக்கையோடு, ஒற்றுமையோடு, ஏகமனதாக ஒரு தீர்மானத்தை நிறைவேற்றினோமோ அதேபோன்று, இன்றைக்கு எல்லோரும் ஒன்று சேர்ந்து, உடனடியாக இதைக் கண்டிக்கின்ற வகையில் ஒரு தீர்மானத்தை இந்த அவையில் நிறைவேற்ற வேண்டும். அதைப்போல இந்தப் பிரச்சினையை உச்ச நீதிமன்றத்திற்கு எடுத்துச் செல்லக்கூடிய நிலையை இந்த அரசு உருவாக்க வேண்டுமென்று மீண்டும் வலியுறுத்திக் கேட்டு அமைகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கரி. இராமசாமி, ஒரு நிமிடம் இருங்கள். (குறுக்கீடு)

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர்: இப்போது எழுப்பிய கேள்விக்கு நான் பதில் சொல்லிவிடுகிறேன். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், ஒரு நிமிடம் இருங்கள். உங்களுக்கு நான் வாய்ப்புத் தருகிறேன். மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.

முற்பகல் 11–45

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு பாரதப் பிரதமர் திரு. நரேந்திர மோடி அவர்கள் குஜராத் மாநில முதலமைச்சராகப் பொறுப்பு வகித்தபோது நீட் தேர்வை எதிர்த்ததாக மாண்புமிகு

2019 ஜூலை 8] [டாக்டர் சி. விஜய பாஸ்கர்]

எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் இங்கே தெரிவித்தார். அது சரிதான். அதைத்தான் நானும் சொல்கிறேன். யார் நீட் தேர்வைக் கொண்டு வந்தது? அதனைக் கொண்டு வந்தபோது மாண்புமிகு அம்மா அவர்களும் அப்போது அதை எதிர்த்தார்கள். திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சியில் இருந்தவரை நீட் தேர்வை தமிழகத்தில் நுழைய விடவில்லை என்று தெரிவிக்கும் கருத்து ஏற்புடையதல்ல. (குறுக்கீடுகள்) *இல்லையில்லை. காரணம், திராவிட முன்னேற்றக் கழகமும், காங்கிரஸ் கட்சியும் ஆட்சியில் இருந்தபோதுதான்* MCI notification *வெளியிடப்பட்டது. நீங்கள்தான் அதனைப் போட்டீர்கள். வெளியிட்ட* notification-*தான் அதற்குப்பிறகு வழக்காக மாறியது. அந்த வழக்கு உச்ச நீதிமன்றத்திற்குச் சென்றதால், உச்ச நீதிமன்றத்தினுடைய தலைமை அமர்வு தீர்ப்பு வழங்கியது. அந்தத் தீர்ப்பின் அடிப்படையில்தான் தற்போது மத்திய அரசு செயல்படுகிறது.* (குறுக்கீடு) *நான் உட்கார்ந்துவிடுகிறேன், நீங்கள் பேசுங்கள்.* (குறுக்கீடு) *நீங்கள் பேசுங்கள். நான் உட்கார்ந்துவிடுகிறேன்.* (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமசாமி, உங்களுக்கு வாய்ப்புத் தருகிறேன்.*

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குஜராத் மாநில முதலமைச்சர் எதிர்க்கிறார். தமிழ்நாட்டினுடைய மாநில முதலமைச்சரும் அதை எதிர்க்கிறார். அதற்குப்பிறகு* Gazette–*ல்* notification *வெளியிடப்பட்டதால்தானே வழக்கு வருகிறது. இல்லையென்றால் இந்தப் பிரச்சினையே இல்லையே! வழக்கு தாக்கலாகிறது, உச்ச நீதிமன்றத்தில் தீர்ப்பும் பெறப்படுகிறது. தீர்ப்பு வந்தபிறகு சீராய்வு மனுவினை நீங்கள் தாக்கல் செய்கிறீர்கள். அந்த சீராய்வு மனுவில்* Sankalp *தொண்டு நிறுவனமும் இணைந்துகொள்கிறது. அதனால்தான் உச்ச நீதிமன்றத்தினுடைய* Bench *மீண்டும் இரண்டாவது முறையாக தீர்ப்பு ஒன்றை வழங்குகிறது. அதைச் செயல்படுத்த வேண்டிய கட்டாயத்தில் நாம் இருக்கிறோம். அந்தக் கட்டாயத்தின் அடிப்படையில்தான் இந்தியா முழுவதுமுள்ள அனைத்து மாநிலங்களும் அதை ஏற்றுக்கொண்டுவிட்டன. தமிழ்நாட்டைத் தவிர இந்தியா முழுவதுமுள்ள அனைத்து மாநிலங்களும் அதை ஏற்றுக்கொண்ட பிறகும்கூட கவுன்சிலிங் நடத்தாமல் கடைசிவரை, கடைசி விளிம்புவரை, இதற்குமேல் கவுன்சிலிங் நடத்தவில்லையென்றால் உச்ச நீதிமன்றத்தினுடைய* contempt–*க்கு*

[டாக்டர் சி. விஜய பாஸ்கர்] [2019 ஜூலை 8

ஆளாகிவிடுவோம் என்ற அந்த கடைசி விளிம்புவரை போராடிய ஒரே மாநிலம் தமிழ்நாடுதான். அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசுதான். (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களே இதை ஒப்புக்கொண்டிருக்கிறார். எந்தச் சூழ்நிலையிலும் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு நீட் தேர்விலிருந்து exemption வேண்டுமென்கிற கொள்கையில் இன்றுவரை, இந்த நிமிடம்வரை உறுதியாக உள்ளது. வெளியிடப்பட்ட notification காரணமாக தொடரப்பட்ட வழக்கில், உச்ச நீதிமன்றத்தால் வெளியிடப்பட்ட தீர்ப்பின் அடிப்படையில் நடக்க வேண்டிய கட்டாயம் நமக்கு இருக்கிறது. ஆகவே, பேசுவதற்கு உங்களுக்கு தார்மீக உரிமையில்லை என்பதைத்தான் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்கு மீண்டும் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இருங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீட் தேர்வு குறித்து இங்கே நடைபெற்ற பல்வேறுவிதமான விவாதங்களுக்கு மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் விளக்கம் அளித்திருக்கிறார். இதற்குமேல் யாராலும் விளக்கங்கள் சொல்ல முடியாது. அருமையான விளக்கங்களை இங்கே தந்திருக்கிறார். (குறுக்கீடுகள்) ஒரு சட்டமன்றத்தில் மத்திய அரசை எதிர்த்து கண்டனத் தீர்மானம் போட முடியாது. அதைத் தெரிந்துகொள்ளுங்கள். உயர் நீதிமன்றத்தினுடைய தீர்ப்பும் தற்போது வந்திருக்கிறது. சட்ட நிபுணர்களுடன் மீண்டும் கலந்தாலோசித்து உயர் நீதிமன்றத்திலோ அல்லது உச்ச நீதிமன்றத்திலோ சீராய்வு மனு ஒன்றைத் தாக்கல் செய்வதற்கு வாய்ப்பு இருக்கிறதா என்பது குறித்து ஆராய்ந்து தமிழக அரசின் சார்பாக நல்ல முடிவு எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்.

திரு. மு.க. ஸ்டாலின்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய அரசைக் கண்டித்து கண்டனத் தீர்மானம் போட முடியாது என்று மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள் இங்கே

2019 ஜூலை 8] [திரு. மு.க. ஸ்டாலின்]

தெரிவித்திருக்கின்றார். அதை நான் ஏற்றுக்கொள்கிறேன். மத்திய அரசை வற்புறுத்தியாவது தீர்மானம் ஒன்றைப் போடுவதற்கு இந்த அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே இதுகுறித்துத் தெரிவித்துவிட்டேன். நாம் சட்டமன்றத்தில் நிறைவேற்றி அனுப்பிய மசோதாக்களை மத்திய அரசு நிராகரித்து, அதுகுறித்து உயர் நீதிமன்றத்தில் affidavit தாக்கல் செய்யப்பட்டதில் உயர் நீதிமன்றமும் அதை நிராகரித்திருக்கிறது. ஆகவே, இதுகுறித்து சட்ட நிபுணர்களுடன் மீண்டும் கலந்தாலோசித்து சீராய்வு மனு ஒன்றினை உயர் நீதிமன்றத்திலோ அல்லது உச்ச நீதிமன்றத்திலோ தாக்கல் செய்யலாமா என்பது குறித்து ஆய்வு செய்து ஒரு நல்ல முடிவினை அரசு எடுக்கும். அப்போதாவது காங்கிரஸ் கட்சி அதை எதிர்த்து வாதாடாமல் இருந்தால் நாட்டிற்கு நல்லது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய தமிழக சட்டமன்றத்திலே நிறைவேற்றப்பட்ட அந்த இரண்டு மசோதாக்களும் மேதகு குடியரசுத் தலைவர் அவர்களின் ஒப்புதலுக்காக அனுப்பப்பட்டன. 2017 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 22 ஆம் தேதியன்று "தமிழக அரசினுடைய அந்த இரண்டு மசோதாக்களும் withheld, அதாவது நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன" என்ற தகவல் மத்திய அரசிடமிருந்து தமிழக அரசுக்கு அனுப்பப்பட்டிருந்தது. அதுகுறித்து ஏற்கெனவே மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சட்டமன்றத்தில் எழுப்பியதற்கு மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களும் அந்த இரண்டு மசோதாக்களும் நிறுத்திவைக்கப்பட்டுள்ளன என்பது குறித்த தகவல் வந்துள்ளது என்று இங்கே தெரிவித்தார். பிறகு, என்ன காரணங்களுக்காக அந்த மசோதாக்கள் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன என்பது குறித்து விளக்கங்களைத் தருமாறு

[திரு. சி.வி. சண்முகம்] [*2019 ஜூலை 8*

சட்டத் துறையின் சார்பாக, தமிழக அரசின் சார்பாக மத்திய அரசிற்குக் கடிதம் எழுதப்பட்டது. அந்த இரண்டு மனுதாக்களும் என்ன காரணத்திற்காக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன என்ற விவரம் இன்றைய தேதிவரை தெரிவிக்கப்படவில்லை. ஆனால், இந்த இடைப்பட்ட காலத்தில் உயர் நீதிமன்றத்தில் வழக்கு ஒன்று நிலுவையில் இருந்தது. அந்த வழக்கு விசாரணைக்கு வந்தபோது மத்திய அரசினுடைய வழக்கறிஞர் மத்திய அரசாங்கத்திடமிருந்து, ராஷ்டிரபதி பவனிலிருந்து, Under Secretary *மூலமாக வந்ததாக ஒரு* e–mail *தகவலை அந்த நீதிமன்றத்தில் தெரிவிக்கிறார். அந்த நீதிமன்றத்தில், புதியதாக, 'withheld' செய்யப்பட்டிருக்கின்றது; 'withheld' செய்யப்பட்டிருக்கின்றது என்று சொன்னால், 'நிராகரிக்கப்பட்டிருக்கின்றது' என்று அதற்குப் புதியதாக ஒரு விளக்கம் சொல்லியிருக்கிறார். நமக்குத் தெரிந்து,* Dictionary*–ல் 'withheld' என்றால் நிறுத்தி வைக்கப்பட்டிருக்கின்றது என்றுதான் பொருள். ஆனால், கடந்த வெள்ளிக்கிழமை அன்று நடைபெற்ற விசாரணையில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது என்பதை நிராகரிக்கப்பட்டுள்ளதாகச் சொல்லியிருக்கிறார்கள். நீதிமன்றத்தில் அந்தத் தகவலைச் சொல்லியிருக்கிறார்.*

முற்பகல் 11–50

இதுவரையிலும் மத்திய அரசாங்கத்திடமிருந்து அந்தத் தகவல் நமது அரசாங்கத்திற்கு வந்து சேரவில்லை. அப்படியே அந்தத் தகவல் வரும்பட்சத்தில், நீதிமன்றத்தில் சொல்வதை நாம் முழுமையாக ஏற்றுக்கொள்ள வேண்டும். நாமும் ஏற்றுக்கொள்கிறோம். அப்படி இருக்கும்பட்சத்தில் அந்த மனுதாக என்ன காரணத்திற்காக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது என்று தமிழக அரசின் சார்பாக எழுதப்பட்டதை மீண்டும் வலியுறுத்துவோம். அது என்ன காரணத்திற்காக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது என்பதையும், நீதிமன்றத்தில் நிராகரிக்கப்பட்டுள்ளது என்று சொன்னாலும் என்ன காரணத்திற்காக நிராகரிக்கப்பட்டுள்ளது என்பது குறித்து தமிழக அரசுக்கு பதில் வரும்பட்சத்தில், அதில் ஏதாவது குறைகள் இருக்கும்பட்சத்தில், அந்தக் குறைகளை நிவர்த்தி செய்து மீண்டும் தமிழகத்திற்கு NEET*–லே விலக்கு தர வேண்டும் என்று சொல்லி, மத்திய அரசை வலியுறுத்தி மீண்டும் அந்த மனுதாவை மத்திய அரசுக்குக் கொண்டு செல்வதற்கு தமிழக அரசுக்கு அதிகாரம் இருக்கின்றது. இந்த சட்டமன்றத்திற்கு அதிகாரம் இருக்கின்றது. ஆகவே, கண்டனம் தெரிவிப்பதால் நமக்கு எதுவும் நிறைவேறப்*

2019 ஜூலை 8] [திரு. சி.வி. சண்முகம்]

போவதில்லை. அந்த மசோதாக்களில் என்ன குறைகள் இருக்கின்றன என்பதை நிவர்த்தி செய்து, அதுகுறித்து மீண்டும் மத்திய அரசை வலியுறுத்துவதற்கு வாய்ப்பு இருக்கின்றது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு எதிர்க்கட்சி துணைத் தலைவர் அவர்கள்.

***திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, Judicial side–ல் என்ன செய்யப் போகிறோம் என்பதை மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களும், மாண்புமிகு சட்ட அமைச்சர் அவர்களும் சொல்கிறார்கள். அதில் எனக்கு எந்தவித மாறுபட்ட கருத்தும் இல்லை. எங்களுடைய தலைவர் கண்டனத் தீர்மானம் கொண்டுவர வேண்டும் என்று சொன்னார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஓர் ஆட்சியில் இருந்துகொண்டு மத்திய அரசாங்கத்தின்மீது கண்டனத் தீர்மானத்தைக் கொண்டுவருவது என்பது அவ்வளவு உசிதமானது இல்லை என்று சொல்கிறார்கள். அதனையும் நாங்கள் ஏற்றுக்கொள்கிறோம். இப்போது இரத்தம் கொப்பளிக்க மிகவும் ஆவேசமாகப் பேசினார் நம்முடைய Hon'ble Health Minister. உங்களுக்கும் அந்த உணர்வு. எங்களுக்கும் அந்த உணர்வு. கண்டனத் தீர்மானம் இல்லாவிட்டால், அந்த வாசகங்களைப் போட்டு மீண்டும் மத்திய அரசை இந்த மாமன்றம் வற்புறுத்திக் கேட்டுக்கொள்கிறது என்று கேட்பதில் என்ன உங்களுக்கு வந்துவிடப் போகிறது? உள்ளபடியே உங்களுக்கு அதில் விருப்பம் இருக்குமானால் அதனை வற்புறுத்தும் தீர்மானத்தை மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஏற்றுக்கொள்வார்கள் என்று நான் கருதுகிறேன். அதில் எந்தச் சந்தேகமும் இல்லை என்று நினைக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் இங்கே வற்புறுத்தி ஒரு தீர்மானத்தை நிறைவேற்ற வேண்டுமென்ற ஒரு கருத்தைச் சொல்லியிருக்கிறார்கள். ஏனென்றால், இதில் உச்ச நீதிமன்றம், உயர் நீதிமன்றம் என்று மாறி மாறி தீர்ப்புகள் வழங்கியிருக்கின்றன. ஆகவே, முறையாக சட்ட வல்லுநர்களை கலந்தாலோசித்து எப்படி தீர்மானத்தைக்

[திரு. எடப்பாடி கே. பழனிசாமி] [2019 ஜூலை 8 கொண்டுவர வேண்டும், எப்படி நம்முடைய குடியரசுத் தலைவருக்கு அதனை அனுப்ப வேண்டும் என்பதையெல்லாம் ஆராய்ந்து அதற்கு ஒரு நல்ல தீர்வு காண்பதற்கு அரசு முயற்சி செய்யும் என்பதை எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்களுக்கு தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்.

திரு. மு.க. ஸ்டாலின்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கூட்டத் தொடரிலேயே கொண்டுவர வேண்டும் என்பதுதான் எங்களுடைய எண்ணம். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதைத்தான் நான் குறிப்பிட்டேன். எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும், எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்களும் தீர்மானத்தைக் கொண்டுவந்து, அதாவது வற்புறுத்துகின்ற விதத்திலே ஒரு தீர்மானத்தைக் கொண்டுவர வேண்டும் என்று சொல்லியிருக்கிறீர்கள். மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்களும் தகுந்த விளக்கத்தினைத் தந்திருக்கிறார்கள். மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களும் விளக்கம் தந்திருக்கிறார்கள். ஆகவே, இவையெல்லாம் நீதிமன்றத்தில் பல்வேறு சூழ்நிலைகளில் நடைபெற்ற சம்பவங்கள். ஆகவே, இதனை எப்படி எப்படியெல்லாம் கொண்டுவர வாய்ப்பு இருக்கின்றது, எந்த வகையில் கொண்டுவர வேண்டும் என்பதையெல்லாம் சட்ட வல்லுநர்களுடன் தீர கலந்தாலோசித்து தகுந்த முடிவெடுத்து, சட்டரீதியாகப் பெற்று நாம் தீர்மானத்தைக் கொண்டு வருவதற்கு அரசு முயற்சிக்கும் என்பதைத் தங்கள் வாயிலாக எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: என்ன திரு. கரி. இராமசாமி? இவ்வளவு விளக்கத்திற்குப் பிறகும் இன்னும் விளக்கம் தேவையா? (குறுக்கீடு) திரு. ஆஸ்டின், இல்லை, உங்களுக்கு நிறைய கருத்துகள் இருக்கும். (குறுக்கீடு) சந்தேகமும் இருக்கும். மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் மற்றும் எதிர்க்கட்சித் துணைத் தலைவர் இவர்களெல்லாம் விளக்கம் கேட்டு சொன்னதற்குப்

2019 ஜூலை 8] [பேரவைத் தலைவர்]

பிறகு. . . (குறுக்கீடு) நீங்கள் கேட்பதற்கெல்லாம். . . (குறுக்கீடு) நீங்கள் பேசுவது எதையும் நான் பதிவு செய்யவில்லை. உட்காருங்கள். திரு. கரி. இராமசாமி அவர்கள்.

முற்பகல் 11–55

திரு. கரி. இராமசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பேசும்போது காங்கிரஸ் கட்சிதான் இதைக் கொண்டு வந்ததாகச் சொன்னார்கள். எங்களுடைய தேர்தல் அறிக்கையை நீங்கள் முழுமையாகப் படித்துப் பார்த்தீர்களா, இல்லையா என்று எனக்குத் தெரியாது. (குறுக்கீடு) சொல்கிறேன். சொல்லி முடித்துவிடுகிறேன். பிறகு பேசுங்கள். தேர்தல் அறிக்கையில் தெளிவாகச் சொல்லப்பட்டிருக்கிறது.* NEET *தேர்வை விரும்புகின்ற மாநிலத்திலே மட்டும்* NEET *தேர்வு நடக்கும். இல்லையென்றால் அதற்கு விலக்கு கொடுப்பது என்பது எங்களுடைய கட்சியினுடைய தேர்தல் அறிக்கையில் இருக்கிறது. (குறுக்கீடு) இப்போது நடக்கிற விவாதம் நீட் தேர்வு தமிழகத்திற்கு வேண்டாம் என்பது.* BJP *அரசுக்கும், உங்களுக்கும் இருக்கக்கூடிய தொடர்பு என்ன? ஏன் அதைப் பயன்படுத்தி அதற்குரிய ஏற்பாட்டை நீங்கள் செய்யத் தவறிவிட்டீர்கள்? மீண்டும் இப்போது நீதிமன்றத்திலிருந்து தகவல் வருகிறது என்று சொல்கிறோம். இந்த நிலையில், மத்திய அரசு தவறு செய்கிறதென்றால், நீங்கள் ஒரு தீர்மானத்தை நிறைவேற்ற வேண்டியதுதானே! ஏன் தீர்மானத்தை நிறைவேற்ற நீங்கள் மறுக்கிறீர்கள்?*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. ஒ. பன்னீர்செல்வம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அண்ணன் அவர்கள் ரொம்ப விவரமாகப் பேசுகிறார். அதாவது, விளக்கம் சொன்னார். கடைசியில், வழக்கறிஞர் நளினி சிதம்பரம்–சிதம்பரத்தின் மனைவியை வைத்து ஆஜராகியது குறித்துச் சொன்னார். (குறுக்கீடு) சொல்வதைக் கேளுங்கள். நீங்கள் தேர்தல் அறிக்கையைச் சொன்னீர்கள். அந்த தேர்தல் அறிக்கையின் மூலமாக அவர் உச்ச நீதிமன்றத்தில் வாதாடி இருக்க வேண்டும். தமிழகத்திற்கு மட்டுமாவது நீங்கள் விலக்கு அளிக்க வேண்டுமென்று வாதாடி*

[திரு. ஓ. பன்னீர்செல்வம்] [2019 ஜூலை 8

இருக்க வேண்டும். முழுமையாக NEET–ஐ கொண்டு வருவதற்காக வாதாடிவிட்டு, இப்போது நீங்கள் தேர்தல் அறிக்கையை நன்றாகப் படிக்க வேண்டுமென்று சொல்கிறீர்கள். நீங்கள் உங்களுடைய தலைமையிடம் தமிழகத்திற்கு நீட் தேர்விலிருந்து விலக்கு அளிக்க வேண்டுமென்று தேர்தல் அறிக்கையில் சொல்லப்பட்டிருக்கிறது என்று சொல்லி வாதாடியிருந்தால், தமிழர்களுக்கு நன்மை செய்கின்ற நிலையில் நீங்கள் இருக்கிறீர்கள் என்று அர்த்தம். இல்லை, இல்லை, இது நீங்கள் தமிழகத்திற்கு செய்த மிகப் பெரிய துரோகம்தான், நாம் இன்றைக்கு மிகப் பெரிய பாதிப்பிற்கு உள்ளாகியிருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள்கூட, 'மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் ரொம்ப பொங்கி, ரத்தம் கொப்பளிக்க, உணர்வு கொப்பளிக்கப் பேசினார்' என்று சொன்னார். அப்படிப் பேசியதற்குக் காரணம் நீங்கள்தான். 27–12–2010–ல் notification–ஐ நீங்களே போட்டுவிட்டு அதற்குப் பிறகு உச்ச நீதிமன்றத்தில் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் சாதகமான தீர்ப்பை நாம் பெற்றதற்குப் பிறகு மறு ஆய்வு, சீராய்வு மனுவையும், அந்தத் தீர்ப்புக்கு எதிராக சீராய்வு மனுவையும் நீங்களே போட்டீர்கள். கிராமத்தில் பழமொழி இருக்கிறது, 'சட்டி சுட்டதடா, கை விட்டதடா' என்று சொல்வார்கள். சட்டி சுட்டதற்குப் பிறகு கை விட்ட கதையாக இருக்கிறது. அதற்குப்பிறகு இப்பொழுது நீங்கள் இந்தத் தேர்தல் அறிக்கையிலும், 10% கொண்டு வருவேன் என்று கொடுத்தீர்கள். இப்பொழுது அது வேண்டாம் என்று பேசுகிறீர்கள். நாங்கள் திராவிடக் கட்சிகள் ரொம்ப சரியாக இருக்கிறோம். திராவிடக் கட்சிகள் கொள்கையில் உறுதியாக இருக்கிறோம், நீங்கள் இல்லையே! காங்கிரஸ் கட்சி உறுதியாக இல்லையே! நளினி சிதம்பரம் எங்கள் காங்கிரஸ் கட்சியிலேயே இல்லை என்று உங்களுடைய சட்டமன்ற உறுப்பினர் சொல்கிறார். அவர்கள் எல்லாம் தமிழ்நாட்டுக்காரர்கள்தானே! காங்கிரசினுடைய மூத்த தலைவர், முன்னால் மத்திய அமைச்சரின் மனைவிதானே, அவர்கள்தானே போட்டியிட்டார்கள்.

2019 ஜூலை 8] [டாக்டர் சி. விஜய பாஸ்கர்]

அதாவது, எங்களுடைய ஆதங்கம் என்னவென்றால், வெளியில் மக்கள் மன்றத்திலும், தேர்தல் நேரங்களிலும், ஏதோ NEET–ஐ அண்ணா தி.மு.க. கொண்டு வந்த மாதிரியும், நீங்கள் நீட்–ஐ எதிர்த்தவர்கள் போலவும், இப்பொழுது நாங்கள் இரத்து செய்வோம் என்று புதிதாகச் சொல்கிறீர்கள் பாருங்கள். இதுதான் மிகப் பெரிய drama. இந்த நாட்டில் மிகப் பெரிய அரசியல் நாடகம்; நீங்களே கொண்டு வந்து, நீங்களே உச்ச நீதிமன்றத்தில் எதிர்த்துப் போராடிவிட்டு இப்பொழுது "நாங்கள் தேர்தல் அறிக்கையில் கொடுத்திருக்கிறோம், நீங்கள் படிக்கவில்லையா" என்று கேட்கிறீர்கள் பாருங்கள், இது மிகப் பெரிய அரசியல் நாடகம். எந்தக் காலத்திலும் காங்கிரசினுடைய இந்த இரட்டை வேடத்தை மக்கள் ஒருபோதும் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்கும், காங்கிரஸ் கட்சித் தலைவர் அவர்களுக்கும் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்)

(உறுப்பினர்கள் திரு. உ. தனியரசு மற்றும் திரு. எம். தமிமுன் அன்சாரி ஆகியோர் எழுந்து நின்று பேச வாய்ப்புக் கோரினர்.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சொல்வதைக் கேளுங்கள். நீங்கள் கவன ஈர்ப்புத் தீர்மானமும் கொடுக்கவில்லை. Zero hour–லும் இதனை எழுப்பப்போகிறேன் என்று என்னிடம் சொல்லவில்லை. திடீரென்று எழுந்து நின்றால் எப்படி? இது போதும், உட்காருங்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. தங்கம் தென்னரசு அவர்கள், என்ன சொல்லுங்கள். (குறுக்கீடு) ஏற்கெனவே விளக்கம் சொல்லியாகிவிட்டது. உட்காருங்கள், திரு. இராமசாமி, நிறைய விளக்கம் சொல்லியாகிவிட்டது. உட்காருங்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. தங்கம் தென்னரசு அவர்கள்.

(இந்திய தேசிய காங்கிரஸ் கட்சி உறுப்பினர்கள் அனைவரும் அவையிலிருந்து வெளிநடப்புச் செய்தனர்.)